விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 225 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 16 செவ்வாய்க்கிழமை (01.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

காணி சுவீகரிப்புக்கு எதிராக

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்



11

## சமஷ்டி கட்டமைப்பில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு வேண்டும்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

1956ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டி கட்டமைப்பில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். 02

## இந். உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தமிழ் எம்.பிக்களுடன் இன்று சந்திப்பு

- 13ஆவது திருத்தம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.
- தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் ஆராயப்ப[illegible].
- சர்வகட்சி கூட்டம் தொடர்பில் விவாதிக்கலாம்.
- மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பேசப்படலாம்.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் இன்று சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் சுமந்திரன், சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், கலையரசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் ரெலோ கட்சி சார்பாக செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரன், விநோ நோகராதலிங்கம், புளொட் தலைவர் சித்தார்த்தனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் இடம்பெற்ற அனைத்துக் கட்சி கூட்டம் எவ்வித தீர்மானமும் இன்றி முடிவுக்கு வந்த நிலையில் இந்திய உயர்ஸ்தானிகர் தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த சந்திப்பில் 13ஆவது திருத்தச் சட்டம், தமிழ் மக்களின் பிரச்சினை, சர்வகட்சி கூட்டம், மாகாண சபைத் தேர்தல் ஆராயப்படவுள்ளது. (ம-7)

## கோழி இறைச்சி இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

கோழி இறைச்சி சார்ந்த தொழிற்துறைக்கு அவசியமான கோழி இறைச்சியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, ஒரு கிலோ 400 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு 11

## 6 நாள் காய்ச்சல் ஆசிரியை மரணம்


### யாழில் சம்பவம்

(கரணவாய்)

ஆறு நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த ஆசிரியை ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத் தீவு கருப்பட்டமுறிப்பு பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற் 11

## இந்திய வர்த்தகக் குழு யாழ்.விஜயம் முதலீடுகள் தொடர்பில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

இந்திய வர்த்தக குழுவொன்று வட மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சார்ள்ஸ் மற்றும் மாகாண அரசாங்க அதிகாரிகளை சந்தித்து மாகாணத்தில் பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் 11

## சுற்றுலா விசாவில் வெளிநாடு செல்லும் இளைஞர்களை

### விமான நிலையத்தில் அச்சுறுத்தி பணம் பறிக்கும் கும்பல்

(கொழும்பு)

சுற்றுலா விசா மூலம் கொரியா உள்ளிட்ட நாடுகளுக்கு வேலைக்காக வெளிநாடு செல்ல விமான நிலையத்திற்கு வரும் இளைஞர்களை பயமுறுத்தி பணம் பறிக்கும் கும்பல் குறித்து பொது பாதுகாப்பு அமைச்சிற்கு அறிக்கை கிடைத் 11

## மக்கள் வங்கி இன்று திறப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் இன்று திறக்கப்படும் என மக்கள் வங்கி அறிவித்துள்ளது.

இன்று நோன்மதி விடுமுறை என்றாலும் மக்கள்வங்கிக் கிளை 11

## பெற்றோல் விலை ரூ.20 ஆல் உயர்வு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

அதன்படி, நேற்று நள்ளிரவு முதல் ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றில் விலை 20 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதற்கமைய, 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 11

போலிக் கடவுச்சீட்டில் ஜேர்மனி செல்ல முயன்ற

## 4 யாழ்.இளைஞர்கள் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டு மற்றும் விமானச் சீட்டுகளைப் பயன்படுத்தி ஜேர்மனிக்குச் செல்ல முயன்ற 4 யாழ். இளைஞர்கள், நேற்று திங்கட்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்களால் வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசோ 11

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸ விகாரைக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்ற வேண்டுமென வலியுறுத்தியும் தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

கடந்த மே 03 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமான எதிர்ப்புப் போராட்டத்தின் தொடர்ச்சியாக நேற்று பிற்பகல் வேளை கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகியது.

இந்த போராட்டமானது இன்று செவ்வாய்க்கிழமை பிப 4.00 மணிவரை சட்ட விரோதமான திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு அண்மையில் இடம்பெறவுள்ளது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், அக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

அத்துடன் இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு வலுச் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் எரிபொருள் விலையை அதிகரித்தது

(கொழும்பு)

லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் தமது எரிபொருட்களின் விலையை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலைக்கு ஏற்றவாறு நேற்று நள்ளிரவு முதல் அதிகரிப்பதாக தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று நள்ளிரவு முதல் ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 348 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அதேபோல், ஒக்டேன் 95 லீற்றர் பெற்றோல் 10 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 375 ரூபாவாகும்.

இதேவேளை, ஒரு லீற்றர் டீசலின் விலை 2 ரூபாவினால் குறைக்கப்படவுள்ள நிலையில், அதன் புதிய விலை 306 ரூபாவாகும்.

சூப்பர் டீசலின் விலை லீற்றர் ஒன்றிற்கு 12 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதுடன் அதன் புதிய விலை 358 ரூபாவாகும். (ம-7)

# மைத்திரியின் ரிட் மனுவை விசாரிக்க நீதியரசர் மறுப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தமக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் அழைப்பாணையை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரணை செய்வதிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நீல் இத்தவெல விலகியுள்ளார்.

இந்த வழக்கை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய நீதிபதிகள் குழுவின் உறுப்பினரான நீதியரசர் இத்தவெல இந்த மனுவை விசாரணை செய்ய மறுத்துள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்ற (ஜனாதிபதி) நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன அறிவித்தார்.

அதன்படி, இந்த மனு மீதான வாதம் ஒக்டோபர் 16, 17, 18 மற்றும் 20 ஆகிய திகதிகளில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் ஒரு பிரேரணையை தாக்கல் செய்து, Rev. Fr. சிறில் காமினி பெர்னாண்டோ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை விசாரிப்பதற்கு ஒரு [illegible]மையான அல்லது பிரே[illegible]சை கோரியிருந்ததை [illegible]பிடத்தக்கது. (ம-7)

# பியர் தயாரிப்புகளுக்கு அரிசியை நிறுத்துக

## விவசாயத்துறை அமைச்சர்

விலங்கு தீவனம் மற்றும் பியர் தயாரிப்புகளுக்கு அரிசியை பயன்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர, அந்த அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி, விலங்கு தீவனத்துக்கும் பியர் தயாரிப்புக்களுக்கும் அரசி பாவனை இடைநிறுத்தி அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

சில பிரதேசங்களில் நிலவும் வரட்சியான கால நிலை காரணமாக எதிர் காலத்தில், ஏற்படக்கூடிய உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## சமஷ்டி...

நாட்டின் அரசியலமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக அமுல்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம், நீண்ட காலமாக தாமதமாகி வரும் மாகாண சபை தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.


குறித்த அறிக்கையில்,

13ஆவது திருத்தம் இலங்கை அரசியலமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்லவெனவும் ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் அதனை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளதாகவும் அரசியலமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாமல் விடுவது அரசியலமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு தாம் தனிநபர் சட்டமூலம் ஒன்றினை தயாரித்து முன்வைத்துள்ளமையை நினைவுபடுத்தியுள்ள அவர், பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் அதனை சட்டமாக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாடுகளில் மாகாண சபை தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாகவும் இந்த விடயத்தில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம-7)


16 ஆண்டுகள் உம் நினைவுகளுடன்



சகாதேவன் நிலக்ஷன்

1985.11.08 - 2007.08.01

டடா அண்ணா அண்ணி நிலாஷன்

(16579)

செல்வநிலாவகம்
250,(47) புகையிரத நிலைய வீதி கொக்குவில்

2023.08.01



**புளியடி தவமனை வீதியை சமூகஜோதி திரு.ஆ.ம செல்வத்துரை வீதியென பெயர்மாற்றம் செய்தல் தொடர்பான அறிவித்தல் திருத்தம்**

தினக்குரல் மற்றும் வலம்புரி பத்திரிகைகளில் 2023.04.12 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பொது அறிவித்தலில் **சமூக ஜோதி ஆ.ம செல்வத்துரை வீதியின்** பெயரானது தவறுதலாக **சமூக ஜோதி ஆ.ம செல்லத்துரை** வீதியென பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனைத் திருத்தி ஏற்றுக்கொள்வதில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இன்றிலிருந்து ஏழு நாட்களுக்குள் **செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி** எனும் முகவரிக்கு எழுத்து மூலமாக அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஆட்சேபனைகள் இல்லையாயின் பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதனை பணிவுடன் அறியத்தருகின்றேன்.

**கணேசன் கம்ஸநாதன்,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை.**

(C-6987) **2023.08.01**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சுமார் 50 ஆயிரம்
## 'ஐஸ்' போதைப்பொருள் பாவனையாளர்கள்
### தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**நாட்டில் "ஐஸ்" போதைப்பொருட்களுக்கு அடிமையாகி இருக்கின்ற விடயமானது பெரும் அச்சுறுத்தல்களை உருவாக்கியுள்ளது.**

அந்தவகையில் ஐஸ் போதைப்பொருள் பாவனையாளர்கள் இலங்கையில சுமார் 50,000 பேர் இருப்பதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் சட்டத்தரணி சாக்கிய நாணயக்காரவே இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டில் ஐஸ் போதைப்பொருள் பரவி மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில், ஏனைய போதைப் பொருட்களுடன் ஒப்பிடும் போது, அதன் பரவல் தற்போது கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இப்போது பாடசாலை சமூகத்தில் தற்போது புகையிலையின் பாவனை அதிகரித்து காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலை சமூகத்தில் குறிப்பாக பதின்ம வயது மாணவர்களிடையே இந்த பழக்கம் அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது.

அவர்களிடையே அடிக்கடி புகையிலை பாவனையைக் காண முடிகிறது.

புகையிலையைச் சுண்ணாம்புடன் கலந்து வாயில் வைக்கும் பழக்கம் மாணவர்கள் இடையே தற்காலங்களில் வெகுவாக பரவி வருகிறது.

வீட்டிலேயே அவர்கள் சாதாரணமாக இதனை பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புகையிலையால் ஏற்படும் போதைக்கு அவர்கள் பழக்கப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# டெங்கு தீவிரம்

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 56,000ஐ தாண்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை பதிவாகியுள்ள நோயாளர்களில் 50 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கண்டி, கேகாலை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் கணிசமான எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

# வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ள சுகாதார சங்கங்கள்

(கொழும்பு)

முழு சுகாதாரத் துறையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை வேலைநிறுத்தம் செய்ய சுகாதார சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

அரசு மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்துகளை நோயாளிகளுக்கு பரிந்துரைக்கும் மோசமான நிலை உள்ளிட்ட சுகாதாரத் துறையின் ஒட்டுமொத்த வீழ்ச்சியைக் கண்டித்து இந்த அடையாள வேலை நிறுத்த போராட்டம் நடத்தப்படுவதாக சுகாதார சங்க தலைவர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)

## சமஷ்டி அடிப்படையிலான
# அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி வட- கிழக்கில் போராட்டங்கள்






(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் பரவலாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத அதிகாரப் பகிர்வை உறுதி செய்யக் கோரி முன்னெடுக்கப் பட்ட 100 நாள் செயற்றிட்டத்தின் ஓராண்டை முன்னிட்டு குறித்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டன.

(நி-5-30-33-285-315-316)

# சிறுநீரக சிகிச்சையின் பின் உயிரிழந்த சிறுவன்
### பாரபட்சமற்ற விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிறுநீரக சத்திரசிகிச்சைக்கு பின்னர் உயிரிழந்த மூன்று வயது சிறுவனின் மரணம் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது.

'பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரும் விரிவான பகுப்பாய்வு இல்லாமல் சம்பவம் குறித்து முன்கூட்டியே முடிவுகளை எடுப்பது நியாயமற்றது' என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சாமில் விஜேசிங்க தெரிவித்தார்.

எனவே, மரணத்திற்கான உண்மையான காரணத்தை கண்டறிவதற்காக சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துவது அவசியம் என்றும் வைத்தியர் வலியுறுத்தியுள்ளார்.

குழந்தை தீவிர சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளதை கண்டறிந்து இடதுபுற சிறுநீரகத்தை அகற்ற அறிவுறுத்திய மருத்துவர்களின் அலட்சியம் காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளதாக குறித்த குழந்தையின் பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இருந்த போதிலும், அறுவை சிகிச்சையின் போது ஆரோக்கியமான வலது சிறுநீரகமும் அகற்றப்பட்டதாக மருத்துவர்கள் பின்னர் தெரிவித்ததாக குழந்தையின் பெற்றோர் கூறுகின்றனர்.

மேலும் எந்த சிறுநீரகமும் செயற்படாத குழந்தைக்கு தகுந்த சிறுநீரகம் மாற்றப்படும் வரை ஹீமோடையாலிசிஸ் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, தீங்கு விளைவிக்கும் கிருமியால் குழந்தை இறந்துள்ளது. உயிரிழந்த குழந்தை கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தது டன், லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளது.

இந்நிலையில் , குறித்த சிறுவன் உயிரிழந்தமைக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டமொன்றும் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. (நி-5)


மணிவிழா நாயகியை வாழ்த்துகிறோம்

திருமதி. தர்மதேவி மனோகரன்

(Special Trained BHARATHAM, BA,PGDE, SLTS-I)

எமது பாடசாலையில் 22.01.2014 முதல் 01.08.2023 வரை அரும்பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி. தர்மதேவி மனோகரன் அவர்களின் ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய இறைவனை வேண்டுவதுடன் மணிவிழா காணும் மணிவிழா நாயகியை பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.



Congratulations

(ச-6984)

பாடசாலைச் சமூகம். யா/ இணுவில் இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்பந்தாட்டப் போட்டி

## வெற்றியை தனதாக்கியது சென்.பற்றிக்ஸ் கல்லூரி



யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைக்ள் விளையாட்டுச் சங்கம், லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் (UK) அனுசரணையில் மாகாண ரீதியில் நடத்திய 20 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தை பெற்றுள்ளது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

இப்போட்டித் தொடரின் காலிறுதிக்கு முந்திய போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி இலுப்பக்கடவை மகா வித்தியாலயத்தை 5:1 என்ற கோல் கணக்கிலும் காலிறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 7 : 0 என்ற கோல் கணக்கிலும் அரையிறுதி ஆட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை 3 :0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இக் கால்பந்தாட்ட தொடரின் சிறந்த கால்பந்தாட்ட ஆட்ட வீரராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் இணைத் தலைவரான A.J. ஜெறோம் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களையும் வெற்றிக் கிண்ணத்தையும் வழங்கி னார். (நி-5)

## கிளிநொச்சி,மன்னார் மோதவுள்ள நட்புச் சமர்

# கடினபந்து கிரிக்கெட் சுற்றுத்தொடர்

மன்னார் AA Super Kings அணியினரும் கிளிநொச்சி United அணியினரும் நட்பு ரீதியில் மோதவுள்ள கடினப்பந்து கிரிக்கட் சுற்றுத் தொடரானது ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தொடங்கி நடைபெறவுள்ளது.

மூன்று இருபது-20 போட்டியும் இரண்டு 50 ஓவர்களைக் கொண்ட போட்டியுமாக மொத்தம் ஐந்து போட்டிகள் ஓகஸ்ட் மாதம் 5 ஆம், 6 ஆம் மற்றும் 12 ஆம்,13 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (நி-285)

## வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையேயான

# கூடைப்பந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்




கல்வி அமைச்சு வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையே யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நேற்று திங்கள் காலை நடத்திய கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி 20 வயதுப் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை 34 : 29 ( கூடைகள் ) புள் ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வடக்கு மாகாண சம்பியன் ஆகியது. (நி)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2878

தர்மினி




சாமந்தி




யசிந்தா




நரேஷ்




சுபாஷ்




பிரதீபன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் பாரிய குண்டுவெடிப்பு!

- 44 பேர் உயிரிழப்பு
- சுமார் 100 பேர் காயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அரசியல் பொதுக்கூட்டம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 44 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கைபர் பக்துன்வா மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

பாகிஸ்தான் - கைபர் பக்துன்வா மாகாணத்தில் ஜமியத் உலமா - இ - இஸ்லாம் பசல் என்ற அரசியல் கட்சி சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அப்போது திடீரென குண்டு வெடித்ததில் இதில் கட்சியின் முக்கிய பிரமுகர் உட்பட சுமார் 44 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும்100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தக் குண்டுத் தாக்குதலில் பாகிஸ்தானின் பஜௌர் நகரில் அரசியல் கூட்டத்தை குறி வைத்து இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

# சாதனை என்ற பெயரில் ஆபத்தான போட்டோ சூட் 30 வயதில் உயிரை விட்ட பிரான்ஸ் பிரபலம்



(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர் ரெமி லூசிட். இவர் தீவிர சாகச விளையாட்டுகளில் ஈடுபாடு உடையவர்.

வானளாவிய உயர கட்டடங்களின் உச்சிக்கு ஏறி, அதில் அபாயகரமான இடங்களில் நின்று கொண்டு புகைப்படங்கள் எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிடுவது இவரது வாடிக்கை.

இவருடைய இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளத்தில் இவரை லட்சக்கணக்கான ரசிகர்கள் பின்தொடர்கிறார்கள். ரெமிபல முறை ஹாங் காங் நாட்டிற்கு சென்று அங்குள்ள உயரமான கட்டடங்களிலிருந்து புகைப்படங்கள் எடுத்திருக்கிறார். சென்ற வாரம், ஹாங் காங் மத்திய பகுதியில் உள்ள ட்ரெகன்டர் சாலைக்கு ரெமி சென்றார்.

அங்குள்ள ட்ரெகன்டர் டவர் எனும் ஒரு மிக உயரமான கட்டடத்தில் இருந்து படம் பிடிக்கும் நோக்கில், காவலாளியிடம் ஒரு நண்பனை பார்க்க உள்ளே செல்வதாக பொய் சொல்லி உள்ளே சென்றார். லிஃப்டில் ஏறி 49 ஆவது மாடியை அடைந்து அங்கிருந்து வெளியே இறங்கி மாடிக்கு சென்றார்.

மொட்டை மாடிக்கான கதவின் பூட்டை அவர் உடைத்து கொண்டு மேல் மாடி வரை சென்றார். இவர் அங்கிருந்து பல ஆபத்தான இடங்களில் நின்று புகைப்படங்கள் எடுக்க முயற்சித்தார். அப்போது திடீரென நிலைதடுமாறினார்.

இதனால் உதவிக்கு அந்த உச்சி மாடியில் உள்ள சிறிய அறையின் ஜன்னல் கண்ணாடியை பல முறை தட்டினார். இதை கண்ட உள்ளேயிருந்த பணிப்பெண் திடுக்கிட்டு பொலிஸாரை அழைத்தார். ஆனால் உதவி கிடைக்கும் முன் 68 ஆவது மாடியிலிருந்து ரெமி தவறி விழுந்தார்.

மருத்துவ உதவிகுழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் வந்தபோது ரெமி உயிரிழந்தது உறுதிபடுத்தப்பட்டது. அவர் அருகே அவர் எடுத்த பல புகைப்படங்களை கொண்ட அவரது கமரா அருகே கிடந்தது.

பிரான்ஸ் நாட்டு அடையாள அட்டை ஒன்று அருகே இருந்ததை கொண்டு அவரது அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டது. மரணத்திற்கான காரணத்தை ஹாங்காங் பொலிஸார் இன்னும் அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை.

ஜூலை 24 ஆம் திகதி ரெமியின் கடைசி பதிவில் அமெரிக்காவின் டைம்ஸ் ஸ்கொயர் பகுதியின் வான் வழி காட்சியை பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சீனாவைத் தாக்கிய டொக்சூரி புயலால் சுமார் 6 ஆயிரம் ஹெக்டர் பயிர்கள் நாசம்

## 178 வீடுகள் பலத்த சேதம்

(பீஜிங்)

சீனாவின் புஜியான் மாகாணத்தை டொக்சூரி எனும் புயல் தாக்கியதில் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

குறித்த புயல் காரணமாக 178 வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் சுமார் ஆறாயிரம் ஹெக்டர் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதன்மூலம் அங்கு ரூ.493 கோடி அளவுக்கு சேதம் ஏற்பட்டு இருப்பதாக சீன அரசாங்கம் கணித்துள்ளது.



இதற்கிடையே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 8 லட்சத்து 80 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5)

# இராசிபலன்

01.08.2023
ஆடி 16, செவ்வாய்க்கிழமை
பூரணை பின்னிரவு 1.06 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 5.08 மணிவரை

சுபநேரம் -10.33-12.03 மணிவரை
இராகுகாலம்-3.03-4.33 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்-
திருவாதிரை, புனர்பூசம்.

வளவன்

**மேஷம்:** ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்:** எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்:** உறவினர் நண்பர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடியே கைகூடும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, களஸ்திர வழியில் நன்மையுண்டு.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீ வடபத்திர காளியம்மாள் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது.

# மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கு பற்பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான வாய்வழி சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு முகாம் யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.15 முதல் பிற்பகல் 6 மணி வரை முகாம் இடம்பெறவுள்ளது.

சாவிகா சங்கீத அறிவாலயத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இலவச பற்பரிசோதனை முகாம் தொடர்பாக அறிந்து கொள்ள 071 757 5189, 077 902 5810 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.(நி-5-33)



அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேர்த் திருவிழா நேற்று பக்தி பூர்வமாக நடைபெற்றது.

# இன்று மாலை தீர்த்தோற்சவ பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீபால கதிர்காம தேவஸ்தான தீர்த்தோற்சவ பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி தேவலோக ஐராவ தம் பூரண கும்பம் ஏந்தி வர ஆடிவேல் ரதபவனி சட்டநாதர் ஆலயத்தை வலம் வர இருக்கிறார்.

காலை, கலாசார நிகழ்வோடு எம்பெருமான் ஆலய இருப் பிடத்தை வந்தடைந்தவுடன் பிராயச்சித்த அபிசேகம் நடைபெறும் என ஆலய குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பட்டினத்தடிகள் திருநாள் பட்டினத்தார் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 6.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

# 4 கடலாமைகளுடன் மானிப்பாயில் இருவர் கைது

(அராலி)

சட்டவிரோதமான முறையில் நான்கு கடலாமைகளை பட்டா ரக வாகனத்தில் கொண்டு சென்ற இருவரை, மானிப்பாயில் வைத்து மானிப்பாய் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மானிப்பாய் பகுதியில் வீதிப்போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி மில்றோய் உட்பட போக்குவரத்து பிரிவு பொலிஸார் பட்டா ரக வாகனமொன்றை வழிமறித்தனர்.



இந்நிலையில் வாகனத்தின் பின்புறத்தில் சாக்கினால் கட்டப்பட்டிருந்த மூடைகள் காணப்பட்டன. அதனை சோதனையிட்டபோது 4 கடலாமைகள் உயிருடன் கைப்பற்றப்பட்டன. அவர்கள் கடலாமைகளை விற்பனைக்கு கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து 47 மற்றும் 32 வயதான கொழும்புத்துறை மற்றும் இளவாலை பகுதியைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்ததுடன் அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (நி-5-104)



"சைவசமய வாழ்வியலும் ஆன்மிகமும்" எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

# பெண்கள் உள்ளிட்ட நால்வர் ஹெரோயினுடன் கைது

## விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோயினுடன் கைதான இரு பெண்கள் உள் ளிட்ட நால்வர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நால்வரையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

அதனை அடுத்து நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (நி-5-33)

# கலைஞர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் "கலைஞர் ஒன்றுகூடல்-2023" நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் மேற்குறித்த பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (நி-5)

# சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

(சாவகச்சேரி)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோர் விபரம் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் சைவப் புலவர் தேர்வில் திரு.மு.சிவகுமாரன்(கொக்கட்டிச்சோலை), க.கைலைநாதன்(மானிப்பாய்), கு.கந்தபாலன் (கோப்பாய்), திருமதி.ரா.சிவப்பிரியா (இணுவில்), ப.துளசிரஞ்சன் (மட்டக்களப்பு), கு.சுவாமி நாதசர்மா (இணுவில்) ஆகியோரும் இளஞ்சைவப்புலவர் தேர்வில் ம.வினோக்சன் (பொலநறுவை), அ.லஷீஸ்குமார்(திருகோணமலை), செல்வி.க.யோகமணி (திரணியகல), செல்வி. ந.தர்ஷிகா (பொலநறுவை), சு.ஸர்காந் (களுவாஞ்சிக்குடி), செல்வி.அ.நிலாந்தனி (மூதூர்) மற்றும் செல்வி தி.பானுப்பிரியா ஆகியோரும் சித்தியடைந்திருப்பதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் தெரிவித்துள்ளார். (நி-5-30)



கவிஞர் திருமதி சுவர்ணா கௌரிபாலா(ஔவை) எழுதிய "திருத்தொண்டர் சரிதம் மற்றும் உண்மையைத் தேடி" ஆகிய கவிதை நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. (படம்:-சுபேசன்)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"மலையகம் 200 - தாயகத்தின் பக்கங்கள்" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (நி-5)



இயற்கை மற்றும் வனவிலங்கு ஆர்வலரும் சமூக சேவகருமான மனோகரன் சசிகரனின் தன்னலமற்ற சேவையை கௌரவித்து நல்லூர் ரோட்டரிக் கழகம் சிறந்த மனித நேயர் என்னும் விருதினை வழங்கி வைத்துள்ளது. (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம்-வடமராட்சி அல்வாய் வேவிலந்தை முத்து மாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர் உற்சவம் நேற்று மிக சிறப்பாக இடம் பெற்றது.

(படம்:- கஜிந்தன்)

# வவுனியாவைச் சேர்ந்த 4 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்



(மன்னார்)

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி கார ணமாக புகலிடம் தேடி வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 4 பேர் அகதிகளாக படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற் கரையை நேற்று திங்கட்கிழமை காலை சென்றடைந்துள்ளனர். தகவல் அறிந்த மரைன் பொலிஸார் அவர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளனர். இவ்வாறு தஞ்சமடைந்த வர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகள் என தெரிய வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி கார ணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்த வர்களின் எண்ணிக்கை 269 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-285)

# சட்டவிரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட 80 கியூப் மணல் பொலிஸாரால் மீட்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான கனகராயன் ஆற்றுப்பகுதியில் சட்ட விரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட 80 கியூப் இற்கும் மேற்பட்ட மணல் கடந்த 24 மணி நேரத்துக்குள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினுடைய கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை. தவநாதன் இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். மீட்கப்பட்ட மணல் யாவும் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(நி-5-315-316)


## சமையல் வேலையாள் தேவை

முதியோர் இல்லத்தில் கடமை யாற்றுவதற்கு பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கவும்.

## மேற்பார்வையாளர், உதவியாளர் வெற்றிடம்

சிவபூமி முதியோர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு பொருத்த மானவர்கள் விண்ணப்பிக்கவும். (16578)

தலைவர்-சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில்.

021 222 7938, 077 844 8796


## 5 ஆம் ஆண்டு நினைவுகளில்...

மண்ணில்-03.07.1944
விண்ணில்-27.07.2018

அமரர்.
**வள்ளிநாயகி சதானந்தன்**
(இராசகுமாரி)

திதி- ஆடிமாத பூரணை



எம் வாழ்வில் ஒளியேற்றி அழகான
வாழ்வளித்த எம் அன்புத் தெய்வமே...!
அன்புக்கு இலக்கணமாகி அவனி போற்ற
வாழ்ந்திருந்த உம்மை நாம் பிரிந்து
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தனவே...!
நினைவகலா நினைப்பினோடு எங்கள்
நெஞ்சக் கூட்டறைக்குள் என்றுமே
நித்தியமாய் வாழ்ந்து கொண்டேயிருப்பீர்
எம் தாயே...!

(C-6985)

ஆனந்தபவன்,
அல்வாய். குடும்பத்தினர்.

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 450 | 500 | 400 |
| தக்காளி | 280 | 300 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 300 |
| கோவா | 250 | 220 | 280 | 300 |
| கரட் | 350 | 520 | 520 | 600 |
| பூசணி | 120 | 140 | 100 | 160 |
| புடோல் | 80 | 80 | 120 | 200 |
| வாழைக்காய் | 150 | 160 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 350 | 350 | 400 | 400 |
| வெண்டக்காய் | 160 | 100 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 120 |
| லீக்ஸ் | 260 | 250 | 250 | 240 |
| பீற்றூட் | 180 | 220 | 220 | 300 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 350 | 400 |
| போஞ்சி | 500 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 240 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 100 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 160 | 300 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 130 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 60 |
| ஈரப்பலா | 140 | 150 | 100 | 100 |

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 11 இடுகாட்டு வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 67 ஆதனத்தின் ஆதனப் பெயரானது எமது ஆதனப் பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது. இலக்கம் 45 இராஜேந்திரா வீதி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜேக்கப் அந்தோனி மகள் மெற்றில்டா தற்போது சிங்கராஜா றோச் செல்வநாயகம் பெண் மெற்றில்டா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மனுவல் ஆசீர்வாதம் யேசுதாசன் முகதாவில் 1977.10.29 ஆம் திகதி 53 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "பம்மைவெளி" என்னும் பெயருடைய ஆதனத்தின் விஸ்தீரணம் நெற்பரப்பு 1 குளி 4.8 அளவு கொண்ட ஆதனத்தை நாவாந்துறை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தோமஸ் பிலிப்பிற்கும் பெண் அன்னமேரிக்கும் அறுதி விற்றுள்ளார்.

அதன் பின்னர் தோமஸ் பிலிப்பு கைம்பெண் அன்னமேரி என்பவர் பிரசித்த நொத்தாரிசு எஸ்.ஆர். ஜி.நிரோசினி முகதாவில் 2021.12.05 ஆம் திகதி 290 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி மேற்குறித்த பெயருடைய ஆதனத்தை இலக்கம் 27 நாவாந்துறை வடக்கு யாழ்ப்பாணம் என்னும் இடத்தைச் சேர்ந்த அன்று பெண் மேரி ஜெஸ்மின் இந்துசா என்பவருக்கு அறுதி விற்றுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று யாழ். மாநகரசபை, யாழ்ப்பாண பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு நாவாந்துறை வடக்கு J/85 வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "பம்மைவெளி" நெற்பரப்பு 1 குளி 4.8ம் வீடும் அதற்குரியவைகளும். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ரி.கந்தையா அவர்களால் 25.04.1966 இல் 2167 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நிலஅளவைப்படத்தில் துண்டு 5 எனச் சுட்டப்பட்டுள்ளது. எல்லைகளாக

கிழக்கு -ஒழுங்கை.
வடக்கு - குறித்த படத்தில் துண்டு 6 என சுட்டப்பட்ட கையொழுங்கை.
மேற்கு- குறித்த படத்தில் துண்டு 4 என சுட்டப்பட்ட ஆதனம்.
தெற்கு- ஒழுங்கை இதனடங்கலும்.
இன்னும் குறித்த படத்தில் துண்டு 6 என சுட்டப்பட்ட ஆதனத்தின் ஊடாக பிரதான ஒழுங்கைக்கும் போக்குவரத்து செய்யும் உரித்தும் இன்னும் குறித்த படத்தில் துண்டு 4 என சுட்டப்பட்ட ஆதனத்திலிருக்கும் கிணற்றில் பாவிக்கும் உரித்தும் வழி வாய்க்கால் உரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை அன்று பெண் மேரி ஜெஸ்மின் இந்துசா என்பவர் தனது பெயரை எமது ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அன்று பெண் மேரி ஜெஸ்மின் இந்துசா என்னும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி-6986)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 244



"இல்லை, பார்த்திபா, இல்லை! உலகில் எந்த அரச குலமும் என்றென்றைக்கும் நீடித்திருந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை. இராமர் பிறந்த இக்ஷவாகு குலத்துக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. சளுக்கர்களை வீழ்த்த இரட்டை மண்டலத்தார் தோன்றினார்கள். இராஜ்யங்கள் சில சமயம் உன்னத நிலைமை அடைவதும் சில சமயம் தாழ்ச்சி உறுவதும் இயல்பு. சில இராஜ்யங்கள் சில காலம் எவ்வளவோ உன்னதமாக இருந்து விட்டு இருந்த இடம் தெரியாமல் போய் விடுகின்றன. என்னுடைய முன்னோர்களையே பார். கரிகால்வளவன், கிள்ளிவளவன் முதலிய சோழ மன்னர்கள் எவ்வளவோ சீரும் சிறப்புமாயிருந்தார்கள். அவர்களையெல்லாம் பற்றி இப்போது நமக்கு என்ன தெரிந்திருக்கிறது? கவிஞர்கள் சிலர் அவர்களைப் புகழ்ந்து பாடியிருப்பதனால் அவர்கள் பேரையாவது தெரிந்து கொண்டிருக்கிறோம். கவி பாடிய பாணர்கள் உண்மையைத்தான் பாடினார்களோ அல்லது நன்றாக மதுபானம் செய்துவிட்டு மனம் போன போக்கில் பாடினார்களோ நமக்குத் தெரியாது. ஆனால் மகேந்திர பல்லவரும் மாமல்லரும் இந்தச் சிற்பபுரியைச் சிருஷ்டித்தார்களே. இது ஆயிரமாயிரம் ஆண்டு காலம் அவர்களுடைய பெருமையை உலகத்துக்கு உணர்த்திக் கொண்டிருக்கும். அவர்கள் செய்த காரியத்துக்கு ஈடாக நீயும் நானும் என்ன செய்திருக்கிறோம். போர்க்களத்திலே பல்லாயிரம் மனிதர்களைக் கொன்று குவித்திருக்கிறோம். இரத்த வெள்ளம் ஓடச் செய்திருக்கிறோம். உலகில் நம் பெயரை நிலைநிறுத்த வேறு என்ன செய்திருக்கிறோம்?"

இதைக் கேட்ட பார்த்திபேந்திரன் இவ்விதம் பேசுவது ஆதித்த கரிகாலன்தானா என்று ஐயுறும் பாவனையுடன் சிறிது நேரம் திகைத்திருந்தான். பிறகு ஒரு பெருமூச்சு விட்டு, "அரசே! போரையும் வீரத்தையும் குறித்துத் தாங்களே இவ்விதம் பேசுவது என்றால், நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது? தங்களுடைய மனம் இன்று சரியான நிலையில் இல்லை. ஆகையினாலேயே இப்படிப் பேசுகிறீர்கள் ஐயா. தங்கள் மனத்திலுள்ள வேதனை இன்னதென்பதை எனக்குச் சொல்லலாகாதா? தங்களுடைய வயிர நெஞ்சத்தைச் சிறிது திறந்து காட்டக் கூடாதா?" என்று ஆவலோடு கேட்டான்.

"பார்த்திபா! என் நெஞ்சைப் பிளந்து காட்டினேனாயின், அதற்குள்ளே என்ன இருக்கும். எவர் இருப்பர் என்று நினைக்கிறாய்?"

"அதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் சுவாமி"

"என்னைப் பெற்ற தாயும் தந்தையும் இருக்க மாட்டார்கள். என் உயிரினும் இனிய தங்கையும் தம்பியும் இருக்க மாட்டார்கள். என் உயிருக்குயிராகிய நண்பர்களாகிய நீயும் வந்தியத்தேவனும் இருக்க மாட்டீர்கள். வஞ்சகமே வடிவான ஒரு பெண் அதில் இருப்பாள். பாவமே உருவான பழுவூர் இளையராணி அதில் இருப்பாள்.

நஞ்சினும் கொடியவளான நந்தினி என் நெஞ்சுக்குள்ளே இருந்து என்னைப்படுத்தி வைக்கும் பாட்டை இன்று வரை வாயைத் திறந்து யாரிடமும் சொன்னதில்லை. உன்னிடந்தான் இன்று சொன்னேன்" என்று ஆதித்த கரிகாலன் கூறிய வார்த்தைகளில் தணலின் ஜூவாலை வீசிற்று.

"அரசே! அதை ஒருவாறு நான் ஊகித்தேன். பழுவூர் இளையராணியின் பேச்சு வரும் போதெல்லாம் தங்கள் முகம் கறுத்துக் கண்கள் சிவந்து சொல்ல முடியாத மனவேதனையை வெளியிட்டதைக் கொண்டு அறிந்தேன்.

ஆனால் இந்தத் தகுதியில்லா மோகம் எப்படித் தங்கள் நெஞ்சில் இடம் பெற்றது? அந்நியப் பெண்களையெல்லாம் அன்னையெனக் கருதும் மரபில் தாங்கள் வந்தவராயிற்றே? பழுவேட்டரையர் தங்கள் குலத்துக்கு நெடுங்கால உறவினர் பிராயம் முதிர்ந்தவர்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிங்கக்குட்டியும் ஸ்மாட் போனும்

இரவு 12 மணி.

'டிங் டிங்' எனச் சத்தம் , தூங்கிட்டிருந்த சிங்கக்குட்டி கண் திறந்து பார்த்துச்சு. சார்ஜ் போட்டிருந்த ஸ்மார்ட் போன் மின்னிட்டிருந்துச்சு. ஏதோ வாட்ஸப்ல மெசேஜ் வந்திருக்கு. 'இந்த நேரத்துல யாரா இருக்கும்னு யோசிச்சுக்கிட்டே சிங்கக்குட்டி எழுந்துச்சு.



வாட்ஸ்அப்பை ஓப்பன் பண்ணிப் பார்த்தால், அட அம்மாகிட்டயிருந்து 'ஹேப்பி பர்த்டே'னு மெசேஜ். சிங்கக்குட்டியின் முகம், 1000 ஸ்மைலிகள் ஒண்ணு சேர்ந்தால் எப்படி இருக்குமோ அப்படி மாறிருச்சு. இதே குகையின் பக்கத்து அறையிலிருந்துதான் அம்மா சிங்கம் மெசேஜ் அனுப்பி இருக்காங்க. 'தேங்யூ' லவ் யூ அம்மா'னு ரிப்ளை பண்ணுச்சு சிங்கக்குட்டி. அப்புறம், கொட்டாவி விட்டுக்கிட்டே படுத்திருச்சு.

சிங்கக்குட்டி எப்பவுமே தாமதமாகத்தான் எழுந்திருக்கும். அதே போல, பர்த்டே அன்னைக்கும் தாமதமா கண்ணை முழுச்சது. பார்த்தால் சிங்கக்குட்டியின் கட்டிலைச் சுற்றி அதனுடைய நண்பர்கள்.

புலிக்குட்டி புஜ்ஜிமா, சிறுத்தைக்குட்டி ஷிவ், கரடிக்குட்டி கௌஷி, மான்குட்டி மிருதுவ் என எல்லோரும் கையில் ஒரு பூ வெச்சிருந்தாங்க. மஞ்சள், சிவப்பு, வயலட் என விதவிதமான கலரில், விதவிதமான மலர்கள். 'ஹேப்பி பர்த்டே ஜூட்டு"னு ஒரே குரலில் சொன்னாங்க.

அப்பா, அம்மா சிங்கங்களும் வாழ்த்து சொன்னாங்க. "சீக்கிரம் முகம் கழுவிட்டு வா"னு சொல்லிக்கிட்டே ஒரு பெரிய ஃப்ரூட் கேக்கை டேபிள் மேலே வெச்சாங்க. சிங்கக்குட்டிக்கு ஒரே குஷி. ஓடிப்போய்ப் பல் விளக்கி, முகம் கழுவிட்டு வந்துச்சு.

மெழுகுவத்தியை ஏற்றி, எல்லோரும் ஹேப்பி பர்த்டே பாட்டுப் பாடினதும் சிங்கக்குட்டி கேக் வெட்டுச்சு. இதை வந்திருந்த ஃப்ரெண்டு ஒவ்வொண்ணும் அவங்க ஸ்மார்ட்போனில் வீடியோ எடுத்துச்சுங்க. உடனடியா ஃபேஸ்புக்ல அப்லோடு செஞ்சதும், காடு முழுக்கப் பரவிச்சு. எக்கச்சக்கமா லைக்ஸ் குவிய ஆரம்பிச்சுருச்சு. சிங்கக் குட்டிக்கு ஃபேஸ் புக், வாட்ஸ்அப், ட்விட்டர் என எல்லாத்திலும் வாழ்த்து குவிஞ்சுட்டே இருந்துச்சு.

அன்னைக்குப் பரிசா வந்த ஒரு ஐ-போனில் குவியும் லைக்ஸைப் பார்த்துக்கிட்டே கால் போன போக்கில் நடக்க ஆரம்பிச்சது சிங்கக் குட்டி. எவ்வளவு தூரம் நடந்துச்சுன்னு அதுக்கே தெரியலை. ஓர் ஆறு குறுக்கிடவும் சட்டுனு நின்னு, சுற்றிலும் பார்த்துச்சு. அடடா ரொம்பத் தூரம் நடந்து வந்துட்டோம் போலிருக்கே. எப்படி வந்தோம். இப்போ, எந்தப் பக்கம் திரும்பிப் போகணும்னு ஒரு நொடி குழம்பிப் போச்சு.

'அட' நம்ம கையில் தான் ஸ்மாட் போன் இருக்கே. மேப் போட்டுப் பார்த்துருவோம்'னு நினைச்சது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலேயே மிகப்பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க் கடலையை சாப்பிட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன். – பாலக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தவில் நாதஸ்வர இசையை பட்டப்படிப்பாக ஆக்க வேண்டும்

எங்கள் வாழ்வியலோடு இணைந்த இசையாக விளங்குவது தவில் நாதஸ்வரமாகும்.

மங்கள இசை, மங்கள வாத்தியம் என்று போற்றப்படுகின்ற தவில் நாதஸ்வர இசை எங்கள் வழிபாட்டுத் தலங்களில் இசைக்கப்படுவதனால் தெய்வீகம் உயிர்ப்போடு இருக்கிறது.

எனினும் தற்போது இருக்கக்கூடிய தவில் நாதஸ்வர இசைக் கலைஞர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை.

இதன் காரணமாக தவில் நாதஸ்வரம் எனும் மங்கள வாத்தியத்துக்கான கொடுப்பனவு உச்சத்தைத் தொட்டுள்ளது.

அதிலும் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான்கள் தவில் மேதைகள் அறவிடுகின்ற கட்டணங்களை இங்கு தெரியப்படுத்தி, யாரையேனும் திகைக்க வைக்க விரும்பவில்லை.

இங்கு நாம் கூறுகின்ற இக்கருத்தை மேலோட்டமாக எடுத்துக் கொண்டு தவில் நாதஸ்வர கலைஞர்களின் கொடுப்பனவை விமர்சிப்பதாக யாரேனும் கருதிவிடாதீர்கள்.

மாறாக நாம் இங்கு கூறுகின்ற கருத்தானது இந்த மண்ணில் மங்கள வாத்தியம் நிலைக்க வேண்டும் என்பதற்கானது.

ஆம், இப்போது இருக்கக்கூடிய வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் பொருளாதார வசதிகள் காரணமாக அதிக் தொகையைச் செலுத்தி தலைசிறந்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் கச்சேரிகளை நடத்துகின்றார்கள்.

இவ்வாறு மங்கள வாத்தியங்களுக்கு முன்னுரிமை கொடுப்பவர்களைப் பார்க்கும் போது, அவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதைத் தாண்டியவர்கள் என்பதை நாம் அவதானிக்க முடியும்.

அதாவது தவில் நாதஸ்வரம் வாசிக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருப்பவர்கள் முதியவர்களும் முதுமை நிலைக்கு அண்மித்து இருப்பவர்களுமே.

ஆக, இளம் வயதினர் மற்றும் மாணவப் பருவத்தில் இருப்பவர்களில் கணிசமானவர்கள் மங்கள இசையை இரசிக்கின்ற மன நிலை அற்றவர்களாக இருப்பதை நாம் காண முடியும்.

ஆக, தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் பற்றாக்குறையும் மங்கள வாத்தியத்துக்கான மிக உயர்ந்த கொடுப்பனவும் சேர்ந்து கால ஓட்டத்தில் தவில் நாதஸ்வர இசையின் முக்கியத்துவத்தை மழுங்கடிக்கச் செய்து விடும்.

ஆகையால் எமது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடத்தில் தவில் நாதஸ்வர வாத்தியத்தை பட்டப்படிப்பாக ஆக்க வேண்டும்.

இதன்மூலம் தவில் நாதஸ்வரக் கலைஞர்களைத் தாராளமாக உருவாக்கி அந்த மங்கள வாத்திய இசையைத் தொடர்ந்தும் உயிரோட்டமாக வைத்திருக்க முடியும் என்பதால், தவில் நாதஸ்வர இசையில் பட்டப் படிப்பை கொண்டு வருவது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும்.

# இலங்கை அரசியல் அமைப்பையே தீயிட்டு எரிக்கும் நிலை ஏற்படும்

## சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசியல் அமைப்பையே தீயிட்டு எரிக்கும் நிலை ஏற்படலாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "தமிழ் மக்கள் விரும்பும் தீர்வினை நாங்கள்வழங்க முடியாது" என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல் அமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தத்தை வழங்குவதற்கு பாராளுமன்றத்தில் உள்ள எவரது அங்கீகாரமும்தேவையில்லை. ஆனால் எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பில் பாராளுமன்றத்தைக் கேட்க வேண்டுமென ஒரு பித்தலாட்டத்தை நடத்தி வருகின்றார்.

தமிழ் மக்களிடம் நாம் கூறவிரும்புவது என்னவென்றால் எமது சுதந்திரத்துக்கான பொதுசன வாக்கெடுப்பை கோரும் செயற்பாடானது ஒரு சில கட்சிகள் மாத்திரமே முன்னெடுத்து வருகின்றன.

ஆனால்அனைவரும் இது குறித்து பேசுமிடத்து இவ்விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்தி தமிழ் மக்கள் கேட்கும் சுதந்திரத்தைப் பெறமுடியும்.

13ஆவது திருத்தத்தை சிங்கள இனவாதிகள் எரித்தார்கள். இதேபோன்றதொரு நிலைமீண்டும் ஏற்பட்டால் இலங்கையின் அரசியல் அமைப்பையே தீயிட்டு எரித்துவிட்டு சர்வதேச சமூகத்தை நோக்கி செல்லுகின்ற நிலை ஏற்படும்.

ஆகவே இலங்கை அரசு தொடர்ந்து ஏமாற்றுகின்றது என்றால் அதற்கு ஏமாறுபவர்களும் பொறுப்பாளிகள் ஆகின்றனர் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழில் வசிக்கும் மனைவி கவர்ச்சிகரமாக ஆடை அணிகிறார்

## விவாகரத்து கோரிய சுவிஸ் மாப்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வசிக்கும்தனது மனைவி கவர்ச்சியான ஆடை அணிவதாகத் தெரிவித்து, திருமணமான மூன்று மாதங்களில் விவாகரத்து கோரி, சுவிஸ் கணவன் வழக்கு தாக்கல் செய்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், புங்குடுதீவை பூர்வீகமாகக் கொண்ட தற்போது சுவிட்சர்லாந்தில் வாழும் 33 வயதான ஒருவரே விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பகுதியொன்றில் வசிக்கும் 24 வயதான யுவதியொருவருக்கும், சுவிட்சர்லாந்து மணமகனுக்கும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக திருமணம் நடைபெற்றிருந்தது.

எனினும் திருமணமான ஓரிரு நாட்களிலேயே தமக்குள் தகராறு எழுந்ததாக கணவன் விவாகரத்து மனுவில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தனது மனைவியுடன் தன்னால் இணைந்து வாழ முடியவில்லையென்றும், மனைவி தன்னிச்சையாக செயற்படுவதாகவும், தனக்கு முரணாக செயற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

திருமணமான ஓரிரு நாட்களின் பின்னர், தனது பெற்றோரின் மனம் நோகும் விதமாக மனைவி செயறபட்டு வருவதாகவும் மாப்பிள்ளை கூறியுள்ளார். மனைவி கவர்ச்சியான ஆடைகள் அணிவதாகவும், அது தமிழ் பண்பாட்டை மதிக்கும் தன்னால் அதை சகிக்க முடியவில்லையென்றும் விவாகரத்து மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# பிழையாக தேசிய கீதம் இசைக்கப்பட்டதால் சர்ச்சை

(கொழும்பு)

லங்கா பிறீமியர் லீக் தொடரின் ஆரம்ப விழாவில் இலங்கையின் தேசிய கீதத்தின் பொருள் மாறும் வ்கையில், புதிய பாணியில் இசைக்கப்பட்டமை தொடர்பில், தற்போது பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி, தேசிய கீதத்தின் வரிகள் மற்றும் அதன்பின்னணி இசையினை மாற்றி இசைக்கப்பட்டமையானது, நாட்டின் கீர்த்தியையும், அரசியலமைப்பையும் மீறும் செயற்பாடாகும் என சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

நான்காவது லங்கா பிறீமியர் லீக் தொடரின் ஆரம்ப விழா கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில், நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

அதில் தேசிய கீத [illegible] வாய்ப்பு, பாடகி உமார சிங்ஹசங்வுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது, அவர் பிழையான உச்சரிப்பில் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் இசைத் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# Q.R பாவனை காரணமாக எரிபொருள் பாவனை குறைப்பு

(கொழும்பு)

தேசிய எரிபொருள் அனுமதி அல்லது QR குறியீடு அறிமுகப் படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கையில் மாதாந்த எரிபொருள் பாவனை 50 வீதத்தால் குறைக்கப்பட்டதாகவும் இதனால் எரிபொருள் இறக்குமதிக்கான செலவு குறைக்கப்பட் டுள்ளதாகவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு டொலர் நெருக்கடியில் இருந்தபோது, QR குறியீட்டை அறிமுகப்படுத்தியதன் பயனாக, மற்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கு டொலரைப் பயன்படுத்த முடிந்தது என்றும், அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு வருடத்திற்குள் 65 லட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூறுகிறது. (ம-7)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு

## கஞ்சா விற்பனை செய்து வந்த நபர் கைது

(கொழும்பு)

மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்களுக்கு கேரள கஞ்சா விற்பனை செய்த மொரட்டுவ பகுதியை சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகள் முடிந்து செல்லும் வழியில் சந்தேகநபர் சில காலமாக கேரள கஞ்சாவினை விற்பனை செய்து வந்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேக நபரிடமிருந்து கேரள கஞ்சாப் பொட்டலங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I






கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### ராஜராஜசோழன் (985 - 1014) காலத்து கஹவனு நாணயம்

ராஜராஜசோழன் (985 - 1014) காலத்து தங்க மடை நாணயம். ஒரு மடை நாணயத்தில் 5 கிராம் தங்கம் இருக்கும். இலங்கையில் தங்கமடை நாணயங்கள் கஹவனு என்று அழைக்கப்பட்டன. இந்நாணயங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

### இராஜேந்திரசோழன் (1012 - 1044) காலத்து நாணயங்கள்

இராஜராஜசோழன் 1012 இல் தனது மகன் இராஜேந்திரசோழனை அரசாங்கத்தில் இணைத்தார். பின்னர் அவர் 1014 இல் இறந்தார். இராஜேந்திர சோழன் 1014 இல் மன்னனாக அரியணை ஏறினான். இக்காலத்தைச் சேர்ந்த "உட்கார்ந்த புலி" வகையின் ஆரம்பகால தங்க நாணயம் படங்களில் காட்டப்பட்டுள்ளன.

ராஜேந்திர சோழன்
தஞ்சாவூர் தங்கம் - யுத்தமல்ல நாணயங்கள்



நாணயத்தின் முன்பக்கம் : புலி (சோழர் சின்னம்) வலது முகமாக இரண்டு நிமிர்ந்த மீன்களை நோக்கி அமர்ந்துள்ளது . நாணயத்தின் பின்பக்கம்: நாகரி எழுத்துக்களில் யுத்தமல்ல என எழுதப்பட்டுள்ளது

இந்நாணயங்களில் "இரண்டு மீன்களை எதிர்கொள்ளும் புலி" என்ற சின்னம் தமிழ் நாட்டின் தஞ்சாவூரைச் சேர்ந்த உத்தம சோழனால் (973-985) அறிமுகப்படுத்தப்பட்டது. அமர்ந்திருக்கும் புலி சோழர் தாயகத்தையும் மீன்கள் பாண்டியனை வெற்றி கொண்டதையும் குறிக்கிறது. பாண்டிய நாணயங்களில் உள்ள மீன்கள் நீந்துவது போன்று கிடையாக இருக்கின்றன. ஆனால் சோழர் நாணயங்களில் செங்குத்தாக (இறந்தவையாக) உள்ளன. யுத்தமல்ல என்பது இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திர சோழன் (1012-1044) ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பட்டமாகும்.

நாணயத்தின் முன்பக்கம் : புலி (சோழர் சின்னம்) வலது முகமாக இரண்டு நிமிர்ந்த மீன்களை நோக்கி அமர்ந்துள்ளது. (மீன்கள் பாண்டியசின்னம்): வில் (சேரசின்னம்) உள்ளன. அதன் பின்னால் மேலே குடை உள்ளது. நாணயத்தின் பின்பக்கம் நாகரி எழுத்துக்களில் யுத்தமல்ல என எழுதப்பட்டுள்ளது.

### கங்கைகொண்டசோழன் (இராஜேந்திர சோழன்- 1014 - 1044) தஞ்சாவூர் வெள்ளிக் காசு

இராசேந்திர சோழன் வடநாடு சென்று பகைவர்களை வென்று கங்கை நீரைக் கொண்டு வந்தான். அதன் அடையாளமாகத்தான் அவனைக் கங்கை கொண்டான் என்று அழைக்கிறோம். நாணயத்தின் முன்பக்கம் : புலி (சோழர்சின்னம்) வலது முகமாக இரண்டு நிமிர்ந்த மீன்களை நோக்கி அமர்ந்துள்ளது. (மீன்கள் பாண்டிய சின்னம்): வில் (சேரசின்னம்) உள்ளன. அதன் பின்னால் மேலே குடை உள்ளது. கீழே நாகரி எழுத்துக்களில் கங்கை கொண்ட சோழன் என எழுதப்பட்டுள்ளது.

கங்கை கொண்ட சோழன்
தஞ்சாவூர் வெள்ளி காசு



நாணயத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் புலி (சோழர் சின்னம்) வலது முகமாக இரண்டு நிமிர்ந்த மீன்களை நோக்கி அமர்ந்துள்ளது

### நிற்கும் காளை சோழர் செப்புமோசா நாணயம் (1215-1236)

கலிங்கமாகன் 1215 ஆம் ஆண்டளவில் அதாவது 13 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அக்காலத்தில் இலங்கையின் தலைநகரமாக விளங்கிய பொலநறுவையைக் கைப்பற்றி 40 ஆண்டுகள் வரை ஆண்டவன் ஆவான். பாளி மொழியிலுள்ள சிங்கள வரலாற்று நூல்கள் மாகன் கலிங்க நாட்டிலிருந்து 24,000 வீரர்களைக் கொண்ட படையுடன் இலங்கையில் இறங்கியதாகக் கூறுகின்றன.

பௌத்த மதத்துக்கு எதிரான இவனது ஆட்சி, இலங்கை வரலாற்றில் பெரும் தாக்கங்களை உருவாக்கியது ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்தி அரச பரம்பரையை உருவாக்கியவனும் இவனே என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இக்கால கட்டத்தில் நிற்கும் காளை சோழர் செப்பு நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. 1284 இல் பாண்டிய ஆரியசக்ரவர்த்தியால் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டது. கலிங்கமாகன் ஆட்சிக் காலத்தில் சிங்கள இராச்சியம் தம்பதெனியாவிற்கு தப்பிச் சென்றது என்று கூறப்படுகிறது.

நிற்கும் காளை சோழர்
செப்பு மோசா நாணயம்
1220 1284



முன்பக்கம்- வலதுபுறமாக பார்த்து நிற்கும் திமில் உள்ள காளை; ஜோதி மற்றும் மேலே பிறை
பின்பக்கம்- இடதுபுறம் பார்த்து ஜோதியுடன் நிற்கும் ராஜா

பொலநறுவை தொடக்கம் கோட்டை இராச்சியம் வரை பயன்படுத்தப்பட்ட குத்திகளாவன மேசா குத்திகள், தம்பதெனிய இராச்சியக் குத்திகள்/ மத்திய கால நாணயங்கள், சிங்க நாணயங்கள் மற்றும் சேது நாணயங்கள் என்பனவாகும்.

நாணயங்களில் இருந்த அரசர்கள் பெயர்களாவன: இர்ராசரட்டை, நிசங்கமல்ல, ராஜராஜ சோழன், கங்கைகொண்டசோழன், ராஜேந்திர சோழன், லீலாவதி,விஜயபாகு I, சகாசமல்லா, பராக்கிரமபாகு I, தர்மஅசோகா ஆகும். தம்பதெனிய குத்திகள்/ மத்திய கால நாணயங்களில் விஜயபாகு III, பாக்கிரமபாகு II , புவேனபாகு I ஆகிய அரசர்களின் பெயர்கள் இருந்தன.

### மோசா குத்திகள்

சோழர்களின் ஆதிக்கத்தை முறியடித்து நாட்டை ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்ததுடன் பொலநறுவை இராசதானியை ஆரம்பித்து வைத்த முதலாவது விஜயபாகு மன்னரும் "கஹவனுக்களை" வெளியிட்டுள்ளார். அவர் நாணயங்களை தயாரிக்கின்ற போது அவற்றின் மேல் தமது பெயரையும் பொறித்தார். இதன்படி நாணயங்களில் தமது பெயரைப் பொறித்து அவற்றை வெளியிட்ட முதலாவது சிங்கள மன்னர் முதலாவது விஜயபாகு மன்னராவார். அந்த நாணயம் "மஸ்ஸ (மோசா)" என அழைக்கப்பட்டது.

பொலநறுவைக் காலகட்டத்தின் ஆரம்பத்திலிருந்து தம்பதெனிய காலகட்டத்தின் இறுதி வரையிலும் மன்னரின் பெயரைப் பொறித்து நாணயங்களை வெளியிடுகின்ற இந்த நடைமுறை செயற்பட்டு வந்தது.

பொலநறுவை இராசதானி காலப் பகுதிக்குரிய நாணயங்கள், அவற்றின் தயாரிப்புக்குப் பொறுப்பான மன்னரின் பெயர் "நாகரி" எழுத்துக்களில் அல்லது "நாகரி" உருக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இதன்படி, விஜயபாகு மன்னனின் பெயர் ஸ்ரீ விஜயபாகு எனவும் பராக்கிரமபாகு மன்னின் பெயர் ஸ்ரீ பராக்கிரமபாகு எனவும் வோடகங்க என்பது ஸ்ரீ வோடகங்கதேவ எனவும் லீலாவதி இராணி என்பது ஸ்ரீ ராஜ லீலாவதி எனவும் சஹஸ்ஸமல்ல மன்னன் என்பது ஸ்ரீ சஹஸ்ஸமல்ல எனவும் தர்மாசோக என்பது ஸ்ரீ தர்மாசோகதேவ எனவும் புவனேகபாகு என்பது ஸ்ரீ புவனேகபாகு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் நிஷங்கமல்ல மன்னரின் பெயர் ஸ்ரீ கலிகலகேஜ என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜயபாகு மற்றும் பராக்கிரமபாகு மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் அவர்களது பெயர்களைப் பொறிக்கின்ற போது அவை எத்தனையாவது விஜயபாகு மன்னருடைய காலத்தில் அல்லது எத்தனையாவது பராக்கிரமபாகு மன்னருடைய காலத்தில் வெளியிடப்பட்டதென்பது குறிப்பிடப்படவில்லை. நாகரி எழுத்துக்களில் பெயர் மாத்திரம் ஒரே விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று லீலாவதி ராணியும் மூன்று காலகட்டங்களில் ஆட்சி புரிந்துள்ள போதிலும் அவரால் வெளியிடப்பட்ட நாணயங்களும் மேற்படி காலகட்டங்களில் எந்தக் காலத்தில் வெளியிடப்பட்டதென்பதை இனங் காண்பதற்கு முடியாதுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 நாள் காய்ச்சல்...

றும் உரும்பிராயைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான சுகந்தன் ஜான்சி (வயது- 46) என்பவராவார்.

மேற்படி ஆசிரியை ஆறு நாள் காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்நிலையில் உடல் சோர்வு ஏற்பட்டதை அடுத்து 29ஆம் திகதி தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## யாழ்.பல்கலைக்...

முல்லைத்தீவு அக்கரைவெளி காணி சுவீகரிப்புக்கு எதிராக நேற்று மாலை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

யாழ்.பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையே நிலங்களை அபகரிக்காதே, எமது நிலம் எமக்கு வேண்டும் எனப் பல்வேறு கோஷங்களை மாணவர்கள் எழுப்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மக்கள் வங்கி...

கள் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வசும நலன்புரி திட்டத்திற்கான கணக்குகளை திறப்பதற்காகவே இந்த கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## சுற்றுலா...

துள்ளது.

இது குறித்து விசாரணை நடத்த பொது பாதுகாப்பு அமைச்சிற்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்

இந்தக் குழுவில் விமான நிறுவனங்களின் அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பலின் நடவடிக்கையினால் கொரியாவில் பணிபுரிய வந்த இலங்கை இளைஞர்களுக்கான விமானங்கள் கூட தாமதமாகி வருவதாக இதுவரை கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சில் பணிபுரியும் இராணுவ அதிகாரி ஒருவரின் உறவினரை இந்தக் கும்பல் மிரட்டி இருநூறு அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொண்டதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து இந்த மோசடி வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இமிகிரேஷன் அதிகாரிகள் போல் நடித்து, வரியில்லா பொருட்களை விற்பனை செய்யும் கடைகளுக்கு அருகில் உள்ள பகுதியில் ஒரே நேரத்தில் மூன்று அல்லது நான்கு இளைஞர்களை கைது செய்து, அருகில் உள்ள அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று பணம் பறிக்கும் வேலையில் ஈடுபடுவதாக தெரியவந்துள்ளது

சுற்றுலா விசாவில் கொரியாவுக்கு செல்ல வரும் இளைஞர் குழுக்களே இந்தக் கும்பலால் அதிகம் குறிவைக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது, இந்த ஏற்பாடு செய்யப்பட்ட குழுக்கள் பயணிகளை கடைசி நிமிடம் வரை தாமதப்படுத்துவதாகவும், இதனால் கொரியாவுக்கான விமானங்கள் உட்பட விமானங்கள் தாமதமாக வருவதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸின் ஆலோசனையின் பேரில் இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் பற்றிய மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. (ம-7)

## ரூ.20 ஆல்...

348 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளது.

அதேபோல், ஒக்டேன் 95 லீற்றர் பெற்றோல் 10 ரூபாயினால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 375 ரூபாயாகும்.

இதேவேளை, ஒரு லீற்றர் டீசலின் விலை 2 ரூபாயினால் குறைக்கப்படவுள்ள நிலையில், அதன் புதிய விலை 306 ரூபாயாகும்.

லங்கா சுப்பர் டீசல் 4 ஸ்டார் யூரோ 4 இன் விலை லீற்றர் ஒன்றிற்கு 12 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளதுடன் அதன் புதிய விலை 358 ரூபாயாகும்.

இதேவேளை, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 226 ரூபாயாகும். (ம-7)

## 4 யாழ் இளைஞர்...

தித்த குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள், அவர்களிடம் காணப்பட்ட கடவுச்சீட்டு மற்றும் விமான ரிக்கெட்டுகள் போலியானவை என்பதை கண்டு பிடித்துள்ளனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## இந்திய...

தூதரகத்தினால் நேற்று திங்கட்கிழமை இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து, மேம்படுத்தப்பட்ட புவியியல் மற்றும் வர்த்தக இணைப்புக்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில், இந்திய தொழில்கள் கூட்டமைப்பு மற்றும் விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளையின் பலதுறை பிரதிநிதிகள், மரபுசார் துறைகளில் நிபுணர்கள் மற்றும் தொழில் துறை தலைவர்களை உள்ளடங்கியுள்ளது.

இதன் போது புதுப்பிக்கத்தக்க எரி சக்தி, தளபாடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு கப்பல் போக்குவரத்து, நீர் மேலாண்மை, தகவல் தொழில் நுட்பம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகிய பகுதிகளில் முதலீடு செய்வதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டன.

மேலும், இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடனான நெருக்கமான ஒத்துழைப்பு, இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீள உதவும் அதேவேளையில் பகிரப்பட்ட செழிப்பை உறுதி செய்யும் என ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் கைத்தொழில், நகர அபிவிருத்தி அதிகார சபை, முதலீட்டு சபை, கூட்டுறவு, பால் பண்ணை மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

வடமாகாணத்திற்கான தமது 3 நாள் விஜயத்தின் போதுசம்பந்தப்பட்ட முதலீட்டு தளங்களையும் பார்வையிடும் அதேவேளை, வடமாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்களைச் சந்திப்பதற்கும் தூதுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கோழி இறைச்சி...

வந்த கோழி இறைச்சி, தற்போது ஆயிரத்து 400 முதல் ஆயிரத்து 450 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், அவற்றின் விலையை கட்டுப்படுத்துவதற்காக, கோழி இறைச்சியை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16349)

T.P:077 544 8503


# இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு பயனுள்ளதாக அமைய வேண்டும்

## மாவை. சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு பயனுள்ளதாகஅமையவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேக்கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேக்கும் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பு எத்தகைய விடயம் கலந்துரையாடப்படும் என்பதை ஊகிக்கக்கூடியதாக இருந்தாலும் இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான விஜயத்தை பூர்த்தி செய்ததன் பின்னணியில் இச் சந்திப்பு நடைபெறவுள்ளது

எனினும் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பானது கடந்த இரண்டு மூன்று தடவைகள் இடம்பெற்றிருந்த போதும் அது முறையானதாக இல்லாது முரண்பாடுகள் உடையதாகவே காணப்பட்டுள்ளது.

குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்க்கட்சிகள் அதனைத் தீர்வாக ஏற்றுக் கொள்ளாத போதிலும் அதையாவது நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையே வலியுறுத்தி வந்தோம் கடந்த 36 வருட காலமாக இதனைக்கோரி வந்தபோதும் ஒரு சில மாதங்கள், வாரங்களில் இதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது கேள்விக்குறியே.

குறித்த 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை நீக்கிவிட்டு நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் சில கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதுமட்டுமன்றி 13 ஆம் திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை ரத்துச் செய்கின்ற தனிநபர் பிரேரணையை பாரளுமன்றத்தில் கொண்டு வரப்போவதாகவும் அறிவிப்புக்கள் வெளிவந்துள்ளது. இவ்வாறான சூழலில் ஜனாதிபதியோ அரசியல் அதிகாரப் பகிர்வு வேண்டுமா அல்லது தேர்தல் வேண்டுமா என்ற சாரப்படலான கேள்விகளை தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில் முன்வைத்துள்ளார்.

அடுத்துவருகின்ற காலங்களில் ஜனாதிபதியுடன் தமிழ்க்கட்சிகள் சந்திப்பதனால் பலன் உண்டா என்பதில் கேள்விக்குறிகள் உள்ள நிலையில் இந்தியத் தூதுவருடனான சந்திப்பு நடைபெறவுள்ளது. இச் சந்திப்பில் நான் கலந்துகொள்ளாது விட்டாலும் இச் சந்திப்பில் எமது பிரதிநிதிகள் கலந்துகொண்டு முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்கள் என்றார். (ம-7)


CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE
0777-068-777
(C-6989)
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



WORK IN UK
WORK PERMITS
CONSTRUCTION WORKERS
➤ 5 YEAR WORK PERMITS
➤ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
➤ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)
✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
✓ ELECTRICIANS ✓ PLUMBERS
✓ STEEL ELECTORS FOR STRUCTURES
போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்
CIMS COLLEGE 0777-068-777



# காணி விற்பனைக்கு

அச்சுவேலி மத்திய கல்லூரிச் சந்தியில் இருந்து தோப்பை நோக்கி 1 Km தூரத்தில் இராச வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்புகளை உடைய மூன்று தனித்தனித் துண்டுகளாக இவை விற்கப்படவுள்ளன.
- வளமான தோட்ட நிலம் - பயிர்ச்செய்கைக்கும் குடியிருப்பை அமைக்கவும் உகந்தது.
- பரப்பு 18 இலட்சம்.
- தரகர்கள் வேண்டாம்.

(16582)

074 131 5639


# கண்ணீர் அஞ்சலி

கடந்த 30.07.2023 அன்று
இறைபதம் அடைந்த

**அமரர் அருணாசலம் தருமன்**



அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின். இழப்பால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பிரிவால் துயருறும்**
**த. திருவருட்செல்வம் குடும்பம்**
**அளவெட்டி**

(C-6988)


# JOB VACANCY

Allai VILLAS JAFFNA

Allai Villas is an iconic project by Heritage North (Pvt) Ltd. It is the first luxury house villas & mixed development resort project in Jaffna. Born with a rich heritage of Jaffna, blended with diverse cultures, Heritage North (Pvt) Ltd offers modern and friendly working environments.

We are looking for the following professionals to join our team to take the project to greater heights and achieve success.

## Manager- Administration

- Minimum 3 years of experience in administration and management
- Experience in the construction industry would be added advantage
- Reading, writing and spoken skills in Tamil and English are necessary
- Able to draft letters, manage documents and coordinate with team and authorities is critical

## Assistant Manager - Sales & Marketing

- Minimum 3+ years' experience as a Sales Executive or similar levels
- Experience in the construction industry/ real estate industry would be added advantage
- Qualifications in business or marketing would be added advantage
- Strong written and verbal communication in Tamil and English are necessary(English must)

(16572)

please **mention the position on the subject** and send your CV to **admin@allaivillas.com**



HERITAGE NORTH

34, Wembady Road, Jaffna.
+94-740-111699
admin@allaivillas.com


# யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

# (1816 - 2023)

# நிறுவுனர் தின வாழ்த்துச் செய்தி

208ஆவது ஆண்டில் கால் பதிக்கும் மத்தியத் தாயை மத்தியின் மைந்தர்கள் சார்பில் வாழ்த்தி வணங்குகின்றோம்.

பெருமைமிகு எங்கள் கல்லூரியின் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் பாதுகாப்போம்.

மத்தியத் தாயின் மைந்தர்கள் புதுமைகள் பல கற்று புதுயுகம் படைக்க தோள்கொடுப்போம்.

'மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்'

**திரு.K.விக்னேஷ்**
**தலைவர்**

**திரு.P.கஸ்ரோ**
**செயலாளர்**

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் - யாழ்ப்பாணம்**
**(ஸ்தாபிதம் 1906)**

(16583)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 161, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org